இந்த 5 ஆண்டு காலத்தில் மட்டும், பல்வேறு திட்டங்களில், பசுமை வீடுகள், அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், இந்திரா குடியிருப்பு, 'தானே' வீடுகள், நெசவாளர் வீடுகள் என்று 12,51,170 வீடுகளும், அதேபோன்று இந்த 7 ஆண்டு காலத்தில் மொத்தம் 14,10,707 வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அனைத்துப் பகுதிகளிலும் அதிகமான வீடுகளை நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, அரிசி வேண்டாதவர்களுக்கு அரிசிக்குப் பதிலாக பணமாகக் கொடுக்கலாம் என்கிற ஒரு கருத்தைச் சொன்னார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரை, அது அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம். பொது விநியோகத் திட்டத்தில் பொருட்களை வழங்கும் திட்டத்தைத்தான் நாம் செயல்படுத்தி வருகிறோமேதவிர, பணமாக வழங்குவது நடைமுறைக்கு சாத்தியம் ஆகாது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைய விவாதம் இத்துடன் முடிவுற்றது. மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் பதிலுரையும், 9–7–2018 ஆம் நாள் திங்கட்கிழமை அன்று தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

11. அரசினர் தீர்மானம்

பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முனைவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2018), 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2018), 2018 ஆம் ஆண்டு சிவ்நாடார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2018), 2018 ஆம் ஆண்டு சாய் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2018), 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கரும்பு (கொள்முதல் விலையை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2018), 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (நில உச்ச வரம்பு நிர்ணயம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2018) மற்றும் 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2018) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முனைவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)